UK Government

# அவசரநிலை எச்சரிக்கை அமைப்பு

புதிய அவசரநிலை எச்சரிக்கைகள் சேவை இப்போது இயக்கத்தில் உள்ளது. அவசரகாலத்தில் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால், மக்களை அவர்களின் கைபேசி மூலம் தொடர்பு கொள்ள இந்த அமைப்பு உதவும். கடுமையான வெள்ளம் போன்ற உயிருக்கு ஆபத்தான அவசரநிலைகள் குறித்து உங்களை எச்சரிக்க இந்த சேவை பயன்படுத்தப்படும்.

அவசர எச்சரிக்கைகள் என்பது நீங்கள் இருக்கும் பகுதியில் உங்கள் உயிருக்கு, உடல்நலம் அல்லது உடைமைக்கு ஆபத்து ஏற்படும் போது, இணக்கமான 4G மற்றும் 5G கைபேசிக்கு அனுப்பப்படும் செய்திகள் ஆகும். இந்தச் சேவைக்கு உங்கள் தொலைபேசி எண் தேவையில்லை அல்லது உங்கள் இருப்பிடத்தைக் கண்காணிக்க வேண்டிய அவசியமும் இல்லை. அரசு மற்றும் அவசர சேவைகள் மட்டுமே இந்த செய்திகளை அனுப்ப முடியும். gov.uk/alerts-இல் ஒரு எச்சரிக்கை உண்மையானதா என்பதை நீங்கள் சரிபார்க்க முடியும். அவசரகாலச் சூழ்நிலைகளைப் பற்றி அரசாங்கம் பொதுமக்களுடன் தொடர்பு கொள்ளும் வழிகளில் அவசர எச்சரிக்கைகள் ஒன்றாகும். எனவே உங்களிடம் கைபேசி இல்லையென்றால், கவலைப்பட வேண்டாம் - மீடியா மற்றும் உள்ளூர் அவசர சேவைகள் மூலம் உங்களுக்கு எச்சரிக்கைகள் அனுப்பப்படும்.

எஸ்எம்எஸ் ‘உரைச் செய்திகள்’ போன்ற பிற வகையான செய்திகளிலிருந்து அவசர எச்சரிக்கை மிகவும் வித்தியாசமாக இருக்கும். நீங்கள் சத்தமாக சைரன் போன்ற சத்தத்தைக் கேட்டாலோ மற்றும் உங்கள் ஃபோன் தனித்துவமான அதிர்வுகளைப் பயன்படுத்தும் போது, அவசரகால எச்சரிக்கை அனுப்பப்பட்டுள்ளது என்பதை நீங்கள் தெரிந்துக் கொள்ளலாம். உங்கள் திரையில் ஒரு செய்தி அவசரநிலை என்ன மற்றும் நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்கும். உங்கள் கைபேசியின் அம்சங்களைப் பொறுத்து, எச்சரிக்கை திரை உருப்பெருக்கத்துடன் வேலை செய்யும், மேலும் ஒலியமைப்பு அமைப்புகளை நீங்கள் மாற்றியிருந்தாலும் உங்களுக்கு செய்தியைப் படித்து காண்பிக்கும். கைபேசி வெளியிடும் தனித்துவமான சத்தம் காது கேட்கும் கருவியைப் பயன்படுத்துபவர்களுக்கும் கேட்கக்கூடியதாக இருக்கும்.

UK Government

நீங்கள் அவசரகால எச்சரிக்கை சேவையிலிருந்து விலகலாம், இருப்பினும், உயிர்கள் ஆபத்தில் இருக்கும்போது உங்களை எச்சரிக்கும் நோக்கத்தில், மக்கள் சேவையிலிருந்து விலக வேண்டாம்

என்று நாங்கள் வலுவாகப் பரிந்துரைக்கிறோம். நீங்கள் விலக விரும்பினால், 'அவசர எச்சரிக்கைகள்' என்பதை உங்கள் அமைப்பில் தேடி அவசர எச்சரிக்கைகளை முடக்கவும். இது வேலை செய்யவில்லை என்றால், உங்கள் சாதன உற்பத்தியாளரைத் தொடர்பு கொள்ளவும். மேலும் ஆலோசனைக்கு gov.uk/alerts/opt-out-க்குச் செல்லவும்

எதிர்காலத்தில் உங்கள் தொலைபேசியில் எச்சரிக்கையைப் பெறலாம், அவ்வாறு செய்தால், எச்சரிக்கையைக் கவனமாகப் படித்து வழிமுறைகளைப் பின்பற்றவும். நீங்கள் மீண்டும் ஒன்றைப் பெற்றால், அதன் தோற்றத்தை நினைவில் கொள்ளவும். இது எவ்வாறு செயல்படுகிறது என்பதைப் பற்றி மேலும் அறிய, **gov.uk/alerts**-இல் உள்ள எங்கள் வீடியோவைப் பார்க்கவும்.

## அமைப்பை சோதித்தல்

புதிய அவசர எச்சரிக்கை அமைப்பு ஏப்ரல் 23 ஆம் தேதி 1500 மணி நேரத்தில் (பிற்பகல் 3:00) தேசிய அளவில் சோதனை செய்யப்படும். அவசர எச்சரிக்கை என்பது உங்கள் கைபேசி திரையில் ஒரு செய்தியுடன் கூடிய சத்தமாக, சைரன் போன்ற ஒலி. மேலும் அறிய, gov.uk/alerts-ஐப் பார்வையிடவும்

## வாகன ஓட்டிகளுக்கு எச்சரிக்கை

வாகனம் ஓட்டும்போது அல்லது மோட்டார் சைக்கிள் ஓட்டும்போது கைபேசியை **வைத்திருக்கக் கூடாது**. அவ்வாறு செய்வது சட்டவிரோதமானது. வாகனம் ஓட்டும் போது நீங்கள் எச்சரிக்கையைப் பெற்றால், உங்கள் கைபேசியை எடுத்துச் செய்தியைப் பார்க்க முயற்சிக்காதீர்கள். உங்கள் வாகனத்தை முழுக் கட்டுப்பாட்டில் வைத்து, வழக்கம் போல் வாகனம் ஓட்டவும். உங்கள் கைபேசியைப் பார்க்க வேண்டிய அவசியத்தை நீங்கள் உணர்ந்தால், முதலில் நீங்கள் பாதுகாப்பான மற்றும் சட்டப்பூர்வ இடத்தைக் கண்டுபிடிக்க வேண்டும்.

VCS Emergencies Partnership

*This translation has been commissioned by the VCS Emergencies Partnership. Content is as published by the Cabinet Office.*